ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
பக்கம்-04
நாதம் 20 திருவள்ளுவர் ஆண்டு- 2039 01-03-2009 ஞாயிற்றுக்கிழமை ஓசை-12




# தமிழினப் படுகொலையைக் கண்டித்து அவுஸ்திரேலியாவில் கவனயீர்ப்பு

## பெருமளவான புலம்பெயர் தமிழர்கள் பங்கேற்பு

(சிட்னி)

இலங்கையில் இடம்பெறும் தமிழினப் படுகொலையைக் கண்டித்து அவுஸ்திரேலியாவில் நேற்று முன்தினம் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றுள்ளது. இதில் பெருமளவான புலம்பெயரவாழ் தமிழர்கள் கலந்துகொண்டு சிறிலங்கா அரசிற்கெதிராகக் கோசங்களை எழுப்பினர்.

அவுஸ்திரேலியாவின் தலைநகரான சிட்னியில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் அவுஸ்திரேலியாவாழ் தமிழர்கள் ஏராளமானோர் கலந்துகொண்டனர். இதில் இலங்கைத் தமிழர்களுக்காக தீக்குளித்து உயிர்நீத்தவர்களுக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டதுடன் வன்னியில் இடம்பெறும் அவலங்களை மக்களுக்கு எடுத்துக்காட்டும்முகமாக ஒளிப்படக்காட்சிகளும் காண்பிக்கப்பட்டன. தமிழர்கள் புலம்பெயர்ந்துவாழும் நாடுகள் எங்கும் இவ்வாறான கவனயீர்ப்புப் போராட்டங்கள் தீவிரமாகத் தினந்தோறும் முன்னெடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## வீரவணக்கம்

21-01-2009 அன்று போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

கப்டன் ஓவியன் (தாவீதுராசா டேவிற், கோட்டைகட்டியகுளம், அக்கராயன் கிளிநொச்சி) என்ற போராளியே வீரச்சாவடைந்தவராவார்.

[illegible]-01-2009 அன்று போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

மேஜர் காந்தரூபன் (சிறிகானந்தராசா ரஜீந்திரன் - அம்பாறை மாவட்டம்) என்ற போராளியே வீரச்சாவடைந்தவராவார்.

23-01-2009 அன்று போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

கப்டன் அமுதரசன் (கோணேசன் சுதாகரன், அம்பாறை மாவட்டம்) என்ற போராளியே வீரச்சாவடைந்தவராவார்.

24-01-2009 அன்று நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

நாட்டுப்பற்றாளர் மயில்வாகனம்

(04ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியிலிருந்து சிகிச்சைக்காகச் சென்ற தாயையும் பிள்ளைகளையும் காணவில்லை

வன்னியிலிருந்து தென்பகுதிக்கு சிகிச்சைபெறச் சென்ற தாயும் இரண்டு பிள்ளைகளும் காணாமற்போயுள்ளார்கள். வன்னிப்பகுதியில் இருந்து காயமடைந்த நிலையில் திருகோணமலை மருத்துவமனைப்பகுதிக்கு கொண்டுசெல்லப்பட்டு பின்னர் மன்னார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நோயாளர்களில் தாய் ஒருவரும் இவரது இரு பிள்ளைகளும் நேற்று முன்தினம் பிற்பகல் காணாமற்போயுள்ளனர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த சகுந்தலா என்ற தாயும் அவரது மகனும், மகளுமே காணாமற்போயுள்ளனர். சிறிலங்காப் படையினரால் இவர்கள் கடத்தப்பட்டிருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

## வன்னியிலிருந்து நேற்று 350 நோயாளிகள் மேலதிக சிகிச்சைக்கு அனுப்பிவைப்பு

## எறிகணை, விமானத் தாக்குதல்களில் 34 பேர் படுகொலை, 35 பேர் படுகாயம்



(அலுவலகச்செய்தியாளர்)

எறிகணை மற்றும் விமானத்தாக்குதல்களில் படுகாயமடைந்தவர்களின் ஒரு தொகுதியினர் மேலதிக சிகிச்சைக்காக செஞ்சிலுவைச்சங்க கப்பல்மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

எறிகணைத்தாக்குதல் மற்றும் விமானக்குண்டுத்தாக்குதலில் படுகாயமடைந்தவர்கள் மாத்தளன் வைத்தியசாலையில் அனுமதிக்கப பட்டிருந்தனர். இவர்களில் 350 நோயாளர்கள் செஞ்சிலுவை கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (சு)

# இலங்கைத் தமிழர்கள் பாதுகாக்கப்படவேண்டும்

## ஒஸ்கார் விருது பெற்ற ஏ.ஆர். ரகுமான்


(சென்னை)

இலங்கையில் தமிழ் மக்கள் பாதுகாக்கப்படவேண்டும் என சினிமா அதியுயர் விருதான ஒஸ்கார் விருது பெற்றுக்கொண்ட ஏ. ஆர். ரகுமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், ஒஸ்கார் விருது வழங்கும் விழாவோ இந்த மேடையோ அரசியல் விடயங்களுக்கான இடமல்ல. இருந்தபோதும் எந்த உயிரினத்திற்கும் துன்பம் ஏற்பட நான் விரும்புவதில்லை. இலங்கையில் அமைதியான சூழலில் தமிழ் மக்கள் பாதுகாக்கப்படவேண்டும் என விரும்புகின்றேன். நான் அரசியலுக்கு அப்பாற்பட்டவன் என்றார்.

இசைக்கான ஒஸ்கார் விருதை ரகுமான் அண்மையில் பெற்றார். இந்த விருதைப் பெற்ற முதல் தமிழன் ரகுமான் ஆவார். இந்த விருது வழங்கும் நிகழ்வில் ரகுமான் தமிழில் உரையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவருக்கு தமிழ்நாட்டில் பல பாராட்டு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



படப்பிடிப்பு:கா.சுரேன்

(அலுவலகச் செய்தியாளர்)

சிறிலங்கா அரசாங்கம் பாதுகாப்பு வலயம் என அறிவித்த பகுதி மீது சிறிலங்காப்படையினர் நடாத்திய எறிகணை மற்றும் விமானத்தாக்குதலில் 34 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதோடு 35 பேர் படுகாயமடைந்துள்ளனர். இதில் 18 வீடுகள் சேதமடைந்துள்ளன.

நேற்று மாத்தளன், பொக்கணைப் பகுதிகளில் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதல்கள் மற்றும் காலையும் மாலையும் மேற்கொண்ட விமானத் தாக்குதல்களிலேயே இவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை நேற்று மாலை சிறிலங்கா விமானப்படையின் யுத்த விமானங்கள் இரணைப்பாலையை அண்டிய பகுதிகளில் தாக்குதலை மேற்கொண்டன. இதில் இடம்பெயர்ந்து சென்றுகொண்டிந்த வாகனங்கள் தாக்குதலில் எரிந்து நாசமாகியுள்ளன. இத்தாக்குதலில் படுகாயமடைந்தவர்களை மக்களோடு போராளிகளும் சேர்ந்து வேகமாக வைத்தியசாலைக்கு அனுப்பும் பணியில் ஈடுபட்டனர்.

பலியானவர்களின் பலரது பெயர் விபரங்களை உடனடியாகப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. இச்சடலங்கள் ஆங்காங்கே அடக்கம் செய்யப்பட்டுள்ளன. காயமடைந்தவர்கள் மருத்துவமனைக்கு அவசர அவசரமாக எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

சிறிலங்கா இராணுவத்தின் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் சில

(04ஆம் பக்கம் பார்க்க)

# ஐ. நா. பாதுகாப்புச் சபையில் தமிழர் விவகாரம் விவாதிக்கப்படும்

## ஐ. நா. தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன

(நியூயோர்க்)

இலங்கைத் தமிழர் விவகாரம் ஐ. நா. பாதுகாப்புச் சபையில் விவாதிக்கப்படவுள்ளது. ஐ. நா. பாதுகாப்புச் சபையில் இலங்கைத் தமிழர் விவகாரம் விவாதிக்கப் படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனை ஐ. நா. தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

அண்மையில் இலங்கை நிலைமைகள் குறித்து ஐ. நா. பாதுகாப்புச் சபையில் விவாதிக்கப்படவேண்டுமென மெக்சிக்கோ வேண்டுகோள் விடுத்தபோது அதனை ரஷ்யா நிராகரித்ததையடுத்து இவ்விடயம் கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எனினும், இதனை விவாதிப்பதற்கான முயற்சியில் மெக்சிக்கோ ஈடுபடும் எனத் தகவல் வெளியாகியிருந்தன.

இதேவேளை, இவ்விவகாரத்தைப் பாதுகாப்புச் சபையில் விவாதிக்காமல் ஐ. நா. தலையிட முடியாதென ஐ.நா. செயலாளர் நாயகம் பான் - கீ - மூன் தெரிவித்திருந்தார்.



**ஒற்றை அடியோடு எல்லாம் மாறும் –தமிழா ஒன்றாய் எழு நீ வெற்றி சேரும்.**

# வீரவணக்கம்



# லெப்.கேணல் செந்தோழன்

## நாகராசா கிருபாகரன்

## யாழ்-மாவட்டம்

## வீரச்சாவு-06.02.2009



களத்திலே படப்பிடிப்பாளனாய்
கவிதை வடிப்பதில் வல்லோனாய்
உளத்திலே மக்களை நேசித்தாய்-உன்
பணி இழந்து தவிக்கின்றோம் நாம்.

ஈழநாதம்

# வீரச்சாவு அறிவித்தல்



இல.977, திருநகர் வடக்கு, கிளிநொச்சியை நிரந்தர முகவரியாகவும், வல்லைஞர்மடம், கண்ணன் ஆயுள் வேத வைத்தியசாலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட

# உணவினை தயாரிப்பதற்காக விறகிற்காக அலையும் மக்கள்

(முல்லை)

சிறிலங்கா அரசாங்கம் அறிவித்துள்ள பாதுகாப்பு வலயப்பகுதிக்கு இடம் பெயர்ந்து சென்று தங்கியுள்ள மக்கள் தமக்குத் தேவையான உணவினைத் தயாரிப்பதற்கு விறகினைப் பெறுவதில் பெரும் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

கடற்கரையை அண்டியுள்ள இச்சிறிய பிரதேசத்தில் விறகினைப் பெற்றுக் கொள்ளமுடியாது. இதனால் வடலிகளில் உள்ள காய்ந்த மட்டைகளை வெட்டி விறகாக சிலர் பயன்படுத்திவருகின்றனர். மண்டல பற்றைக் காடுகளுக்குச் சென்று பச்சை மரங்களை வெட்டி இதனை சிலநாட்கள் வெயிலில் காயவிட்டு சிலர் அதனை விறகாகப் பயன்படுத்தி வருகின்றனர். இப்பிரதேசத்திலுள்ள மரங்களின் தன்மை அறியாத சிலர் தில்லைமரம் போன்ற பால்வகையான மரங்களை வெட்டும்போது அதன் பால்கள் உடலில் பட்டு பலருக்குப் புண்கள் ஏற்பட்டுள்ளன. இதனைவிட காய்ந்த நிலையிலிருந்த தில்லைமர விறகினை பயன்படுத்திய சிலர் அது எரியும்போது அதன் பால்தன்மை வெடித்துச் சிதறி முகங்கள் அவிந்தநிலை காணப்படுகின்றது. எனவே இப்பகுதிகளில் விறகினை எடுப்போர் இப்பகுதியில் உள்ள முதியவர்களின் ஆலோசனைகளைப் பெறுவது சிறந்ததாகும்.

இடம்பெயர்ந்துவரும்போது தமது வீடுகளை அமைப்பதற்காக மரம், தடிகள், தீராந்திகள், ரீப்பைகள் போன்றவற்றையே சிலர் தற்போது விறகாகப் பயன்படுத்தி வருவதுடன் இவற்றைப் பதுங்குகுழிகளுக்கும் பயன்படுத்தி வருனகின்றனர்.

இவ்வாறு கொண்டுவந்த மரம்தடிகளை சிலர் தற்போது விறகாக்கி விற்று தமக்குத் தேவையான உணவு வகைகளை தயாரிப்பதற்காக அரிசி, மாவு, பருப்பு, சீனி போன்றவற்றையும் கொள்வனவு செய்வதை அவதானிக்க முடிகிறது.

இதனைவிட இடம்பெயர்ந்து சென்று இப்பகுதியில் தங்கியுள்ள மக்கள் எதுவித தொழில்வசதியுமின்றி குடும்பச் சுமையினைத் தாங்குவதற்காகவேறு இடங்களுக்குச் சென்று விறகுகளை எடுத்துவந்து இப்பகுதியில் விற்பனை செய்யும் துவிச்சக்கரவண்டி வியாபாரிகள் 1200 ரூபாவரை விறகினை விற்று வருகின்றனர்.

மேலும் உந்துருளிகள், ஈருருளிகள், வாகனங்களில் செல்வோர் தமக்கு கையில் அகப்படும் விறகாகப் பயன்படுத்தக்கூடியவற்றை கட்டிச்செல்வதையும் காணமுடிகிறது. (ஜெ)

# ஒரு கிலோ மிளகாய்த்தூள் மூவாயிரம் ரூபாவுக்கு விற்பனை

(நமது செய்தியாளர்)

அம்பலவன் பொக்கணை, மாத்தளன், வலயர்மடம் பகுதிகளில் ஒரு கிலோ மிளகாய்த்தூள் மூவாயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

உணவுத் தேவையில் கறிசமைப்பதற்கு மிகவும் முக்கியமானதாகக் கருதப் படும் மிளகாய்த்தூள் இவ்வாறு அதியுயர்வான விலைக்கு விற்கப்படுவதால் அதனைப்பெற்று மக்கள் உணவிற்குப் பயன்படுத்துவதில் பெரும் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

இடம்பெயர்ந்து எதுவித தொழில்வாய்ப்புமின்றி நிவாரண உதவிகளுமின்றி வெட்ட வெளியிலும், வயல்நிலங்களிலும், பனை மரங்களின் கீழும் வாழும் வறிய மக்கள் இதனால் தமது உணவிற்காக மிளகாய்த்தூளினை பயன்படுத்தாது வெள்ளைக்கறியாக சமைத்து உண்டு வருகின்றனர். மிளகாய்த் தூளினைப் பயன்படுத்தி உணவினை தயாரிக்காததால் சுவை எதுவுமற்ற நிலையில் வயிற்றுப் பசியினை நிரப்புவதற்காக மக்கள் இவ்வாறு உணவு தயாரித்து உண்டு வருகின்றனர். இதனால் பல குடும்பங்களில் மிளகாய்த்தூளின்றி தயாரிக்கப்பட்ட கறிவகை களை குடும்ப உறுப்பினர்கள் உண்ணாது விடுவதினையும் அவதானிக்க முடிந்தது. (ஜெ)



வீரவேங்கை புலியழகி என்றழைக் கப்படும் ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீகௌரி அவர்கள் 26.02.2009 அன்று வீரச்சா வைத்தழுவிக் கொண்டார்.

இவர் ஆயுள்வேத வைத்தியர் ஸ்ரீரங்கநாதன் புஸ்பலீலா மணஇணை யரின் அன்பு மகளும், ஸ்ரீதரன், ஸ்ரீவதனி ஆகியோரின் அன்பு உடன் பிறப்பும், சசிகலா, அகிலன் ஆகி யோரின் மைத்துனியும், யதுஷி காவின் அன்பு அத்தையும் ஆவார்.

இம் மாவீரரின் துயர்பகிர்வு நிகழ்வு குருசடி வீதிக்கு அடுத்து வரும் வீதியில் தற்காலிக முகவரி யில் நடைபெறவுள்ளது. இவ்வறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரையும் ஏற்றுக்கொள் ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## வீரவேங்கை புலியழகி
## ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீகௌரி
**வீரச்சாவு :- 26.02.2009**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

(17445)

**கத்தோலிக்க திருச்சபையின்**

## உளநிலை பாதிக்கப்பட்ட பெண்கள் சிகிச்சைக்காக திருமலை அனுப்பிவைப்பு

திருகோணமலைக்கு நேற்று மேலதிக சிகிச்சைக்காகக் கொண்டுசெல்லப்பட்ட நோயாளர்களுடன் கத்தோலிக்க திருச்சபையின் உளநிலை பாதிக்கப்பட்ட பெண்களும் அனுப்பப்பட்டுள்ளார்கள். கத்தோலிக்க திருச்சபையின் அருட்கன்னி யரின் பராமரிப்பிலுள்ள இவர்களின் பாதுகாப்பிற்காக கத்தோலிக்க திருச்சபை யின் மற்றுமொரு நிலையத்திற்கு கொண்டுசெல்லப்படுவதற்காக சர்வதேச செஞ்சிலுவைக் குழுவிடம் நேற்று இவர்கள் கையளிக்கப்பட்டார்கள்.

இவர்கள் திருகோணமலையிலுள்ள அருட்கன்னியரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். ஆனால் கத்தோலிக்க திருச்சபையின் பொறுப்பாளர்களிடம் ஒப்படைக் கப்படுவார்களா அல்லது சிறிலங்காவின் வதைமுகாம்களுக்கு அனுப்பப்படு வார்களா என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

## அறிவித்தல்

நோயாளர் நலன்புரிச் சங்கத்தில் பணியாற்றிய அனைத்துப் பணியாளர்களையும் எதிர்வரும் 02.03.2009 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அம்பலவன் பொக்கணை மகாவித்தியாலயம் முன்பாக வந்து சந்திக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் :- பணிப்பாளர்,**
**நோயாளர் நலன்புரிச் சங்கம், தலைமைப்பணிமனை.**



## 8ஆம் நாள் நினைவஞ்சலி

## லெப்.கேணல் தமிழரசன் / சர்வன்
## துரைசிங்கம் கிரிதரன்

**வீரச்சாவு**
**22**
**02**
**2009**

விடுதலைத்தீயின் எரிதலொன்று வெந்து தணிந்து
போரிலும் நிர்வகிப்பிலும் சிறந்ததீரன் நீ மண்ணையணைத்தாய்
நிமிர்ந்த நெடிதுயர் தோற்றம், நேர்கொண்ட பார்வை
பணி உறுதியும், தீரமும் கொண்ட போரழகன் நீ
அழகான சிரிப்புடன் அக்கறையான அன்புரிமைக்கண்டிப்பு
முடிவுகளில் தீர்க்கம், தீர்வுகளில் நியாயம் இது உன் தனி
தமிழீழ சமர்க்கள வரலாற்றின் வீறுகொண்ட இறுதிப்பக்கம்
உன்வீரத்தையும் தன்னிலெழுதி எண்ணிலா பெருமைகொண்டது
எவ்வாறய்யா உன்னை நன்றியற்று நாம் மறப்பது? நீ வரலாறாய்
வாழ்ந்தபாடமாய் எம் நினைவுன் என்றுமிருப்பாய்.

(17444)

**போராளிகள், பணியாளர்கள்.**

## சிந்தனைக்கு



விடுதலை உணர்வே மனித ஆன்மாவின் சாரமாக- உயிர்மூச்சாக-இயங்குகின்றது. மனித வரலாற்றை இயக்கும் மகத்தான சக்தியும் அதுவே

தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 01.03.2009

தொலைபேசி 060-2213244 மின் அஞ்சல்
தொலைநகல் 021-2283948 natham23 ela@ yahoo.com

## வலி அதிகமாயினும்..!

வன்னியில் மக்கள் இன்று இதுவரை இல்லாத அளவிற்குப் பெரும் வாழ்வியல் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர். தொடர்ச்சியான சிறிலங்கா இராணுவத்தின் தாக்குதல்கள், பெரும் எண்ணிக்கையில் உயிரிழப்புக்கள், காயங்கள், தொடர் இடப்பெயர்வுகள் என்பன ஒருபுறம் மக்களை வாழ்விடங்களில் இருந்து விரட்டுபவையாகவுள்ளன.

மற்றொருபுறம் உணவுப்பொருட்களின் விநியோகம் துண்டிக்கப்பட்டமையால் ஏற்பட்டுள்ள பெரும் உணவுப்பொருள் பற்றாக்குறை, இதனால் ஏற்பட்டுள்ள பஞ்சம், பசி, பட்டினி இவற்றினால் ஏற்பட்டுள்ள போசாக்கின்மை, இதன் உச்சமாக, பட்டினிச்சாவு ஏற்படக்கூடிய அவலம் போன்றவை ஏற்படும் அபாயநிலை என்பனவும் உருவாகியுள்ளன.

அத்தோடு, மருந்துப் பொருட்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளும், வைத்தியசாலைகள் செயலிழந்து போயுள்ளமையும் காயமடைந்தோரையும் நோய்வாய்ப்பட்டுள்ளோரையும் பராமரிக்க முடியாத அவலநிலையையும் தோற்றுவித்துள்ளது. இதனால் மரணங்கள் ஏற்படும் சூழ்நிலைகளும் தோன்றியுள்ளன.

இத்தகையதொரு நிலையில் அன்றாட வாழ்வு

-தமிழகம் தூத்துக்குடியில்-

# இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு எதிராக கறுப்புக்கொடிப் போராட்டம்

(சென்னை)

இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கு எதிராக கறுப்புக்கொடி காட்டும் போராட்டம் தமிழகத்தில் நடைபெற்றது. தமிழகம் தூத்துக்குடி அனல்மின் நிலைய அடிக்கல் நாட்டும் நிகழ்விற்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி சென்றபோதே இப்போராட்டம் நடத்தப்பட்டது. அங்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகப் பொதுச் செயலாளர் வைகோ உள்ளிட்டவர்கள் கறுப்புக்கொடி காட்டும் போராட்டத்தை நடாத்தினர். இதன்போது வைகோவும் 150 தொண்டர்களும் கைது செய்யப்பட்டார்கள். ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக இந்தப் போராட்டம் நடாத்தப்பட்டது.

# அனர்த்தகால நீர் பயன்பாடு குறித்து பொதுமக்களுக்கு ஆலோசனை

(மாத்தளன்)

அனர்த்தகால நீர்ப் பயன்பாடு குறித்து அனர்த்தகால முகாமைத்துவக்குழு ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

இது தொடர்பாக விடுத்துள்ள செய்திக் குறிப்பில், குடிப்பதற்கு கொதித்தாறிய நீரை மட்டும் பயன்படுத்தவேண்டும், சிறிய பிள்ளைகளுக்கு கொதித்தாறிய நீரை ஒரு கண்ணாடிப் போத்தலில் விட்டுப் பாவித்தல் வேண்டும், இதன்மூலம் நீரிலுள்ள தூசு, மண்டி போன்றவற்றை அடையாளம் கண்டு கொள்ளமுடியும், கொதித்தாறிய நீரை அள்ளிப் பருகுவதற்கு எப்போதும் ஒரே சிறிய குவளையைப் பயன்படுத்தவேண்டும், அதனைச் சுத்தமான இடத்தில் வைத்திருத்தல் வேண்டும், பொதுக் கிணறுகளில் பயன்படுத்தும் தண்ணீர் அள்ளும் வாளிகள் எவை என்பதைத் தீர்மானித்தல் வேண்டும், இதனால் சுத்தமான வாளிகளால் தண்ணீர் அள்ளுவதை உறுதிப்படுத்தமுடியும், கிணற்றடியைச்சுற்றி தண்ணீர் தேங்காதவகையில் உயரமாக மண் போட்டு நிரப்புதல் வேண்டும், அத்துடன் தண்ணீர் தேங்காத வகையில் சீரான கால்வாய் அமைத்து கழிவு நீர் வெளியேறிச் செல்ல ஒழுங்கு செய்தல் வேண்டும், கிணற்றை குளிப்பதற்குப் பாவிக்கும்போது ஆண், பெண் தனியாகக் குளிக்கக்கூடிய வகையில் மறைப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளல் சிறந்ததாகும். இவ்வாறு தனியானக் குளிப்பிடங்களை அமைத்துக் கொள்வதால் விரைவாகவும், சிரமமின்றியும் கிணற்றடியைப் பயன்படுத்தமுடியும், குளிக்கும்போது தடித்த பெரிய ஆடைகளைப் பயன்படுத்தாது மெல்லிய சிறிய ஆடைகளைப் பயன்படுத்துவதால் அவற்றைக் கழுவுவதற்காக வீரையாகும் நீரின் அளவைக் குறைத்துக்கொள்ளமுடியும். இதற்கு ஆண், பெண் தனியாகக் குளிப்பதற்கு மறைப்புக்களை ஏற்படுத்துதல் சாத்தியமாகும். ஒரு தனிநபர் குளிப்பதற்கு 30 லீற்றர் தண்ணீர் போதுமானதாகும், கிணற்றில் இருந்து வாளியால் அள்ளிக் குளிப்பதை நிறுத்தி நீரை அள்ளி ஒரு பெரிய வாளியில் ஊற்றி குளிப்பதன்மூலம் நீர் வீண் விரயமாவதைத் தவிர்க்கலாம். நீர் ஊற்று நிலமட்ட அருகிலுள்ள இடங்களில் பாதுகாப்பான சிறிய கிணறுகளை அமைப்பதன்மூலம் பொதுக் கிணற்றடியில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தவிர்த்துக்கொள்ளமுடிவதுடன் சுத்தத்தினையும், சுகாதாரத்தினையும் பேணவும் முடியும். எல்லோருக்கும் நீர் பயன்படவேண்டுமென்பதோடு, அதனைச் சுத்தமாகப் பயன்படுத்தவும்வேண்டும் என்பதற்காக பாவனையாளர்கள் சேர்ந்து ஒரு குழுவினை அமைத்து நீர் பாவனை, கிணற்றடிச் சுத்தம் என்பதைப் பற்றி அறிவுறுத்துவதுடன் அவற்றை எழுதிக் காட்சிப்படுத்துவதும் சிறந்ததாகும். (100)

# இந்திய இறையாண்மைக்கு எதிராக இயக்குநர் சீமான் பேசினாராம்

இந்தியாவின் இறையாண்மைக்கு எதிராகப் பேசியதாக புதுச்சேரி காவல்துறை இயக்குநர் சீமான் மீது குற்றம்சுமத்தியுள்ளார்.

புதுச்சேரியில் ஈழத்தமிழர் ஆதரவு உண்ணாநிலைப்போராட்டம் நடத்தப்பட்டபொழுது சீமான் உரை நிகழ்த்தினார். இதில் அவர் இந்திய இறையாண்மைக்கு எதிராகப் பேசியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தற்போது சீமான் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை தொடர்பான நிலைப்பாட்டில்

குறித்து மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அவலமும் எதிர்காலம் குறித்து ஏற்பட்டுள்ள குழப்பகரமான நிலையும் மக்களின் வாழ்வியலைப் பெரும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது. இதனால் பெரும் விசனம் கொள்ளவும் வைத்துள்ளது.

மக்கள் சந்திக்கும் நெருக்கடிகளும், அவலங்களும் யதார்த்தபூர்வமானவையே. ஆயினும், இனத்தின் விடுதலையுடன் ஒப்பிடுகையில் அதாவது ஒரு சுதந்திரநாட்டின் பிறப்புடன் ஒப்பிடுகையில் இத்தகைய துன்பங்களும் துயரங்களும் சுமக்கப்பட முடியாதவையா? மேற்கூறப்பட்ட நெருக்கடிகளுக்காக, சவால்களுக்காக விடுதலைப் போராட்டத்தைச் சுதந்திரத்தைக் கைவிடலாமா? என்பதே கேள்வி யாகும்.

உலகில் பல்வேறு நாடுகள் தமது சுதந்திரத்திற்காகப் போராடியுள்ளன. அமெரிக்காவில் இருந்து கிழக்குத் தீமோர் வரையில் இது அடங்கும் இந்நாடுகள் ஒவ்வொன்றும் இலகுவாக சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டுவிடவில்லை. அதாவது தங்கத் தாம்பாளத்தில் வைத்துச் சுதந்திரத்தை எவரும் அவர்களுக்கு வழங்கிவிடவில்லை. இழப்பின்றிப் பெரும் வலியின்றி அவை கிடைத்துவிடவுமில்லை.

போராட்டத்தில் ஈடுபட்ட அனைத்து நாடுகளுமே பெரும் துயர்களையும் சவால்களை யும் சந்தித்தே வந்துள்ளன. இதற்காக அந்நாட்டு மக்கள் கொடுத்த விலை மிக அதிகம் என்றே கூறமுடியும். ஆனால், அந்நாடுகள் சுதந்திரம் பெற்றபோது - அவை கொடுத்த விலைகள் சுதந்திரத்தின் பெறுமதியை/மதிப்பை அதிகரித்திருந்தனவே ஒழிய குறைந்துவிடவில்லை. ஏனெனில் மக்கள் கொடுத்த விலையைவிட அதற்கும் மேலான சுதந்திரத்தை /விடுதலையைப் பெற்றுக்கொண்டார்கள் என்பதே வரலாறாகும்.

அத்தோடு போராட்டக்கால வாழ்வியல் நெருக்கடியானது தற்காலிகமானது. எமது இனத்தின் நீண்ட வரலாற்றில் சிறிதுகாலத்திற்கானதாகவே இருக்கத்தக்கது. ஆனால் விடுதலை/சுதந்திரமானது எமது இனத்தின் இருப்பிற்கானது. எமது மக்களுக்கு சுபீட்சமான வாழ்வைத் தேடித்தரத்தக்கது. சுதந்திரமற்ற எந்த இனமும் சுபீட்சமான வாழ்வை என்றும் நிரந்தரமாக அனுபவித்ததில்லை. ஆகையினால் போராட்டக்காலம் வலி மிக்கதாயினும் எதிர்காலத்திற்காக அதனைத் தாங்கிக்கொள்ளத்தான் வேண்டும்.

# இந்திய காங்கிரஸ் விடாப்பிடி

இலங்கை தொடர்பான நிலைப்பாட்டில் இந்திய காங்கிரஸ் அரசு எந்தவிதமான மாற்றங்களையும் செய்யாது விடாப்பிடியான நிலையில் உள்ளது. இதனை அண்மையில் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் மருத்துவர் ராமதாஸ் காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தியுடன் நடாத்திய சந்திப்பு வெளிப்படுத்தியுள்ளது.

இச்சந்திப்புக் குறித்து தமிழகத்தில் இருந்து வெளிவரும் ஜுனியர் விகடனில் கழுகார் பகுதியில் வெளிவந்துள்ள தகவல்களில் ஒரு பகுதி வருமாறு: பா. ம. க. நிறுவுனர் மருத்துவர் ராமதாஸ் இந்தியாவின் ஆளும் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவி சோனியா காந்தியைச் சந்தித்து "ஈழத்தமிழர் விவகாரம் தொடர்பாகப் பேசியுள்ளார்.

இலங்கையில் போர் நிறுத்தம் பற்றி ராமதாஸ் பேச ஆரம்பிக்க சட்டென சோனியாவிற்கு முகம் மாறியதாம். நீங்களும் கடந்த ஐந்து ஆண்டுகளாக மத்திய அரசில் அங்கம் வகிக்கின்றீர்கள். இலங்கைப் பிரச்சினை பற்றி இதுவரை நடந்த அமைச்சரவைக் கூட்டங்களில் ஏன் உங்கள் தரப்பு ஆட்கள் பேசவில்லை. இலங்கையுடனான வெளியுறவுக் கொள்கை பற்றி விவாதிக்கப்பட்ட அமைச்சரவைக் கூட்டங்களில் உங்கள் மகனும், சுகாதார அமைச்சருமான அன்புமணி பங்கேற்றுள்ளார். கடந்த ஐந்து ஆண்டுகளாக உங்கள் அமைச்சர்களுடைய இலாகாக்களைக்கூட மாற்றவில்லை. அன்புமணியால் எயிட்ஸ், புகைப்பிடிக்கத் தடைச் சட்டம் போன்றவற்றில் காங்கிரசிற்கு தர்மசங்கடமான நிலை ஏற்பட்டபோதும் உங்கள் பக்கம் நிற்கிறோம். எனவே, இலங்கை விடயத்தில் நீங்கள் எங்களை நிர்ப்பந்திக்கமுடியாதென சோனியா காந்தி கூறியுள்ளாராம்.

என்ன சொன்னாலும், காதில் வாங்கிக் கொள்ளாமல் தமிழர்களின் உயிர்களை அழிக்க டில்லி திட்டமிட்டு காய்களை நகர்த்துவதாக சோனியாவின் பேச்சிலிருந்து புரிந்து கொண்ட ராமதாஸ் தி.மு.க. எங்களை மதிப்பதேயில்லையெனத் தெரிவித்துள்ளார். அதற்குச் சோனியா பதிலளித்துள்ளார்.தமிழ் நாட்டில் கருணாநிதியை நாங்கள் அனுசரித்துப் போகின்றோம். நீங்களும் அனுசரித்துப்போங்களேன். அங்கு கூட்டணியைப் பொறுத்தவரை அவர் எடுப்பதுதான் முடிவென முடிவாகச் சொன்னாராம் சோனியா.

சோனியாவைச் சந்தித்தபோது இலங்கை விவகாரத்தில் எங்கே எம். கே. நாராயணன், சிவசங்கர்மேனன் போன்றோரின் கபட நாடகங்கள்தான் தமிழர்கள் பாதிக்கப்படக் காரணமெனக் குறிப்பிட்டாராம் ராமதாஸ். அப்படியா என்று சோனியா தொடர்புடைய இருவரையும் நீங்களே சந்தித்துப் பேசுங்கள் என்றாராம்.

எம். கே. நாராயணன், மருத்துவர் ராமதாஸ் தங்கியிருந்த இடத்திற்கே சென்று சந்தித்தாராம். இலங்கை விவகாரத்தில் இந்தியாவால் எதுவும் செய்யமுடியாது. அந்த நாட்டை ஓரளவிற்கு மேல் கட்டுப்படுத்தமுடியாது என்று எதிர் மறைப் பதில்களே எம். கே. நாராயணனிடம் இருந்து வந்ததாம்.வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜியும் சிறிலங்காவிற்கு ஆதரவாகப்பேச மருத்துவர் ராமதாசின் முகம் கறுத்துப்போனதாம். உள்ளே சென்றபோது இயல்பாகச் சென்ற அவர் வெளியே வரும்போது இருண்ட முகத்துடன் வந்துள்ளார். பிரணாப் முகர்ஜியின் சந்திப்பு மிகுந்த ஏமாற்றம் அளிக்கின்றது. எங்கள் கட்சியின் நிலைபற்றி பொதுக்குழுவில் முடிவுசெய்வோம் என காட்டமான குரலில் வெளியில் இருந்து ஊடகவியலாளர்களிடம் ராமதாஸ் கூறிவிட்டுச் சென்றுள்ளார்.

இதனிடையே நாடாளுமன்றத்தில் போர் நிறுத்தம் செய்யுங்கள் என சிறிலங்காவை நிர்ப்பந்திக்கமுடியாதென பிரணாப் முகர்ஜி அறிக்கை தாக்கல்செய்தார். இதைக் கண்டித்து பா.ம.க., ம.தி.மு.க. ஆகிய கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர். அப்போது அவர்களைக் கடுமையாக முறைத்துப் பார்த்தாராம் சோனியா. என் கணவரைக் கொன்றவர்கள் மீது எனக்கு கோபம் இல்லை என்று முன்பு சொன்ன சோனியாவின் முகமூடி இப்போது கிழிந்துவிட்டது. எங்களை முறைத்துப்பார்த்தபோது அவரது சுய முகம் நன்றாகத் தெரிந்தது என்று வருத்தப்பட்டு பேசுகின்றார்கள் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

இதேவேளை, சென்னை உயர் நீதிமன்றத்தில் நடந்த வழக்கறிஞர்கள், காவல்துறை மோதல் சம்பவங்கள் எல்லாம் உடனடியாக காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதாம். கோபமடைந்த சோனியா உடனே தமிழக முதல்வரைத் தொடர்புகொண்டு பேசினராம். இலங்கை விவகாரத்தை மையப்படுத்தி தமிழகத்தில் நடக்கும் பல்வேறு சம்பவங்களும் கவலையளிப்பதாகவே உள்ளன. தமிழகத்தில் இருக்கும் அரசியல்வாதிகள்தான் இலங்கை விவகாரத்தை பூதாகரப்படுத்தி அரசிற்குக் கடுமையான சிக்கலை ஏற்படுத்தி வருகின்றார்கள். உயர் நீதிமன்ற வளாகத்தினுள்ளும் கலவரத்தை அரங்கேற்றும்வரையிலும் விவகாரம் விஸ்வரூபம் எடுத்து நிற்கும்போது மத்திய அரசு பார்த்துக் கொண்டு அமைதியாக இருக்கமுடியாது. நீதிமன்ற வளாத்தினுள்ளேயே இருக்கும் காவல்துறை வளாகத்தைச் சூறையாடி தீவைத்துக் கொளுத்தியுள்ளார்கள். இதனை எல்லாம் கடுமையான நடவடிக்கைமூலம் உடனே தடுத்து நிறுத்தவேண்டும் அதற்காக மாநில அரசிற்கு என்ன உதவி தேவைப்பட்டாலும் உதவ மத்திய அரசு தயாராகவுள்ளது.

ஆரம்பத்திலேயே கடுமையான நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொண்டிருந்தால் இந்தப் பிரச்சினை விஸ்பரூபம் எடுத்திருக்காது இருந்தாலும் மேற்கொண்டு இந்த விவகாரத்தை வளரவிடாமல் கடுமையான நடவடிக்கை எடுங்கள் என்று சோனியாகாந்தி தனது கவலையைப் பகிர்ந்துகொண்டராம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 80 இராணுவ உயரதிகாரிகளின் உடல்கள் நான்கு புதைகுழிகளிலிருந்து மீட்பு


## பங்களாதேசில் சம்பவம்

(டாக்கா)

பங்களாதேசின் நான்கு புதைகுழிகளிலிருந்து 80இற்கும் மேற்பட்ட இராணுவ உயரதிகாரிகளின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அங்கு ஊதிய உயர்வுகோரி சில நாட்களுக்கு முன்பு திடீர் கிளர்ச்சியில் ஈடுபட்ட துணை இராணுவப் படையினர் உயரதிகாரிகளைச் சிறைப்பிடித்து சுட்டுக்கொன்றனர். கலவரத்திற்குக் காரணமான துணை இராணுவப் படையினர் கைது செய்யப்பட்டுவரும்நிலையில் காணாமற்போனவர்கள் தேடப்பட்டு வந்தனர். இந்நிலையில் டாக்காவிலுள்ள துணை இராணுவப் படையினர் தலைமையகம் அருகே நான்கு புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து 80 இற்கும் மேற்பட்ட இராணுவ உயரதிகாரிகளின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இச்சம்பவத்துடன் தொடர்புபடாத பொதுமக்கள் சிலரின் உடலங்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# நெல்லைப் பெறுவதற்கு எட்டு மணி நேர கடும் முயற்சி


படப்பிடிப்பு:கா.சுரேன்

(அலுவலகச்செய்தியாளர்)

அரைக்கிலோ நெல்லினைப்பெறுவதற்கு எட்டுமணித்தியாலயம் உமிக்கும்பியில் உழைக்கவேண்டிய நிர்க்கதியற்றநிலையை நாம் அடைந்துள்ளோம் என மன்னாரில் இருந்து பலமுறை இடம்பெயர்ந்து தற்போது பொக்கணையில் வசிக்கும் கார்த்திகேசு சிவலிங்கம் என்பவர் கவலை தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா அரசின் உணவுத் தடையால் பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை. உணவுகள் பெறுவதற்கு ஏதுமற்றநிலையில் இவர்கள் அரிசிஆலையில் இருந்து வெளியேறும் உமியினைத் தூற்றியே அதிலிருந்து கிடைக்கும் நெல்லினைகுற்றி பசியினைப் போக்குகின்றார்கள். இதுதொடர்பாக சிவலிங்கம் எமது நாளிதழுக்கு மேலும் தெரிவிக்கையில்: நாம் மன்னாரில் இருந்து பல இடங்களில் இடம்பெயர்ந்து வசித்துவிட்டோம். ஒவ்வொரு இடங்களிலும் வீடு கட்டி உழைத்த பணமெல்லாம் இல்லாமல் போய்விட்டது. தற்போது சாப்பிடுவதற்கு ஏதுமற்ற நிலையில் இந்த அரைக்கும் ஆலையில் இருந்து வெளியேறும் உமியினைத் தூற்றி அதிலிலிருந்து கிடைக்கும் சொற்ப நெல்லினை வீட்டிற்கு எடுத்துச்சென்றே நாம் கஞ்சி காய்ச்சி குடிக்கின்றோம்.

நேற்று நான் காலையில் இவ்விடத்திற்கு வந்துவிட்டேன். ஆனால் மாலை

# மாத்தளன், பொக்கணைப் பகுதியில் வீதி விபத்துக்கள் அதிகரிப்பு

## தினசரி பலர் காயம்

அம்பலவன் பொக்கணை, வலயர்மடம், மாத்தளன் பகுதியில் தற்போது வீதிவிபத்துக்கள் அதிகரித்துள்ளன. இதனால் தினசரி பலர் காயமடைந்து வருகின்றனர். மன்னார், வவுனியா, மாங்குளம், மல்லாவி, கனகராயன்குளம், ஸ்கந்தபுரம், கிளிநொச்சி, தருமபுரம், விசுவமடு, நெடுங்கேணி, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு உள்ளிட்ட பகுதிகளிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து மிகக்குறுகிய பிரதேசமான இப்பகுதியில் தங்கியுள்ளனர்.

இதனால் அகலம் குறைந்த இந்தச் சிறிய வீதியில் பெருமளவான வாகனங்களும், உந்துருளிகளும், ஈருருளிகளும் பயணம் மேற்கொள்கின்றன. அத்துடன் மக்கள் தமது உடமைகளுடன் வாகனங்களிலும், கால்நடையாகவும் இவ்வீதியால் பயணம் மேற்கொள்கின்றனர்.

இந்நிலையில் ஆங்காங்கே அடிக்கடி வீதிவிபத்துக்கள் ஏற்பட்டு பலர் காயங்களுக்கு உள்ளாகிவருகின்றனர். வீதிகளில் பயணிப்போர் அவதானமின்றி வீதிகளில் குறுக்கறுப்பது, திடீரென வாகனங்களை நிறுத்துவது, வாகனங்களை வாகனங்கள் முந்திச் செல்ல முற்படுவது, வாகனங்கள் சைகை விளக்குகள் என்பனவற்றை அவதானிக்காமல் செல்லும்போதே இவ்வாறான விபத்துக்கள் அதிகம் ஏற்பட்டுவருகின்றன.

இதனால் பல உந்துருளிகளும், ஈருருளிகளும், வாகனங்களும் சேதங்களுக்குள்ளாகி வருகின்றன.

அத்துடன் வீதியோரங்களில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள வாகனங்களினாலும் இவ்வாறான வீதி விபத்துக்கள் அப்பகுதிகளில் அடிக்கடி ஏற்படுகின்றது. மேலும் வீதிக்கு மிக அண்மையாக வியாபாரிகள் தமது பொருட்களைப் பரப்பி வியாபார நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். அவர்கள் விற்பனைக் கவர்ச்சியாக கூவிக் கூவி விற்பனை செய்வதால் பயணிப்போரின் கவனம் கலைந்து திரும்பிப் பார்ப்பதாலும் விபத்துக்கள் ஏற்பட்டுவருகின்றன.

(ஜெ)

# புலிகள் அறிவித்த போர் நிறுத்தமூலம் மக்களை அரசு பாதுகாக்கவேண்டும்

## இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி

(சென்னை)

விடுதலைப்புலிகள் அறிவித்துள்ள போர் நிறுத்தத்தைப் பயன்படுத்தி சிறிலங்கா அரசு தமிழர்களைப் பாதுகாக்கவேண்டுமென்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி வலியுறுத்தியுள்ளார்.

தூத்துக்குடியில் அனல்மின் நிலையங்களுக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் இடம்பெறும் இனப்படுகொலையை இந்திய மத்திய அரசு கவலையோடு கவனித்துவருகின்றது. போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உதவ உணவு, உடை மற்றும் மருந்துகளை இந்திய அரசு அனுப்பியுள்ளது என்றார்.

# மீன் பிடிக்கப்படும் கடற்கரையிலேயே மீனைக் கொள்வனவு செய்ய முடியாத அவலம்

## ஒரு கிலோ மீன் 1200 ரூபா

வன்னிப் பகுதியில் மீன்வளம் நிறைந்த கடற்கரைப் பகுதிகளில் ஒன்றான மாத்தளன், வளைஞர்மடம் கடற்கரைப் பகுதிகளில் ஒரு கிலோ மீன் 1200 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது.

பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து இப்பகுதியில் தற்போது தஞ்சமடைந்துள்ள நிலையில் வெங்காயத்தாளைத் தவிர எதுவித மரக்கறி வகைகளும் இல்லை. இதனால் மீனின் விலை அதி உச்சத்தை எட்டியுள்ளது.

கடற்கரையை அண்டிச் சென்று மக்கள் கடற்றொழிலில் ஈடுபடுவோரிடம் நேரடியாக மீனைக் கொள்வனவு செய்ய

அதனைக் கொள்வனவுசெய்து வேறு இடங்களுக்கு எடுத்துச்சென்றே விற்பனையில் ஈடுபடுகின்றனர்.

இதனால், கடற்கரைப் பகுதியில்கூட மீனை அதியுயர் விலை கொடுத்தே கொள்வனவு செய்யவேண்டியுள்ளது.

இதனால் போசாக்கான உணவாக இப்பகுதியில் பெறக்கூடிய மீனை இந்த விலை கொடுத்து மக்கள் பெறமுடியாத நிலையில் பெரும் அவலங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அத்துடன் மிகக்குறைந்தளவு மீனே சந்தைக்கு வருவதால் காலையிலேயே மீன் விற்பனை முடிவடைகின்றது. சுமார் 10.00 மணிக்குப் பின்னர் எங்கும் மீனைக்

3.30 ஆகியும் அரைக்கிலோ நெல்லுக்கூட இதுவரை சேரவில்லை. என்ன செய்வது. சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பாலும் உணவு தடையாலும் நாம் தொடர்ந்து பட்டினி கிடந்துதான் சாகவேண்டும் என்று அவர் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

முற்படும்போதும் அவ்வாறு அவ்விடத்தில் வைத்து மீன்வகைகள் விற்பனை செய்யப்படுவதில்லை. வியாபாரிகள்

கொள்வனவு செய்யமுடியாத நிலையும் காணப்படுகின்றது. (ஜெ)

## எறிகணைத்....

கிடைக்கப்பெற்றுள்ளன. ப. பூசாரி (வயது - 70), அ. கிருஸ்ணமோகன் (வயது - 27), சி. சத்தியசீலன் (வயது - ஏழு மாதம்), தி. திருப்பதிப்பிள்ளை (வயது - 65).

சிறிலங்கா இராணுவத்தின் எறிகணைவீச்சில் காயமடைந்தோர் விபரம், பே. தங்கராசா (வயது - 39), ச. மானோராஜ் (வயது - 15), சு. செல்லக்குமார் (வயது - 35), ந. சாரங்கன் (வயது -22), க. அம்பலநாதன் (வயது - 38), ச. சசிகரன் (வயது -09), வி. தவமலர் (வயது - 56), த. அன்னலட்சுமி (வயது -55), க. ஜெயசீலன் (வயது - 43), ச. சாந்ததீபன் (வயது -25), ப. அஜித் (வயது - 16), ரு. அகல்விழி (வயது - பத்து மாதம்), இ. சற்குணம் (வயது - 50), சுஜன் (வயது - 14), க. இராசகுலேந்திரம் (வயது - 42), தெ. வஜிந்தன் (வயது - 21), தெய்வேந்திரம் (வயது -52), சி. அகிலன் (வயது - 19), ம. இந்திரரூபன் (வயது - 34), இ. முல்லைச்செல்வி (வயது - 32), பொ. முல்லைச்சாமி (வயது - 28), செ. சங்கீதா (வயது - 14), லோ. நிஷாந்தினி (வயது - 10), க. இலட்சுமிதேவி (வயது - 18), இ. வேலும்மயிலும் (வயது - 47), அ. அருட்பிரகாசம் (வயது - 29), எ. எட்வின் (வயது - 24), லோ. யோகரூபன் (வயது - 15), சி. சிவயோகன் (வயது - 04), சி. சிந்துஜா (வயது - 09), ஆ. நித்தியராசா (வயது - 24), கி. நாகநந்தினி (வயது - 26), சி. கிறேசியன் (வயது - 21), ஒன்றறை வயது மதிக்கத்தக்க ஆண் குழந்தை, பு. சுலக்சினா (வயது - 08), ந. நவமணி (வயது - 45)

(சு, 100)

# பலமான பதுங்ககழிகள் அமைத்து உயிர்காக்கும் நடவடிக்கையில் மக்கள்

(நமது செய்தியாளர்)

மக்கள் தமது வாழிடங்களில் பலமான பதுங்ககழிகளை அமைத்து எதிரியின் எறிகணை மற்றும் விமானக் குண்டுவீச்சுக்களில் இருந்து தம்மைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

பனை மரங்கள், தென்னை மரங்கள் போன்றவற்றை மக்கள் தறித்து அதனை வாகனங்கள்மூலம் ஏற்றிவந்து பதுங்ககழிகளைப் பலமாக அமைத்துவருகின்றனர். வீடுகளை அமைப்பதற்கு முன்னர் பதுங்ககழிகளை அமைத்து பலப்படுத்தி அதன் பின் தறப்பாள் மற்றும் ஓலைகள், தகரங்களைப் பயன்படுத்தி குடிசை வீடுகளை அமைத்து வருகின்றனர்.

அத்துடன் எறிகணைவீச்சு மற்றும் விமானக் குண்டு வீச்சுக்களை முன்னுணர்ந்து பதுங்ககழிக்குள் சென்று உயிர்காக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுவருகின்றனர். இவ்வாறான நடவடிக்கைகளை உதாசீனம்செய்து பதுங்ககழிகளுக்குச் செல்லாதிருப்பவர்களுக்கு உயிரிழப்புக்கள் மற்றும் காயங்கள் ஏற்பட்டுவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஜெ)

# இலையான்கள் பெருக்கத்தினால் வயிற்றோட்டம் பரவும் அபாயம்

(நமது செய்தியாளர்)

இடம்பெயர்ந்து மக்கள் மிகவும் செறிவாக வாழும் பகுதிகளில் வயிற்றோட்ட நோய்க் காரணியான இலையான்களின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

மக்கள் ஓரளவு சுகாதார நடைமுறைகளைப் பேணுகின்றபோதும் மக்களின் தரப்பாள் வீடுகள் ஒன்றுடன் ஒன்று நெருங்கியதாக அமைக்கப்பட்டிருப்பதுடன் மலசட கூடங்களும், வீடுகளுக்கு மிகவும் அண்மையாகவே இருப்பதால் இலையான்களின் பெருக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது.

இதனால், பலருக்கு வயிற்றோட்ட நோய்களும் ஏற்பட்டுள்ளது. மக்கள் தமது வீடுகளையும் சுற்றுப் புறங்களையும் தூய்மையாகப் பேணி வருகின்றபோதும் இந்த இலையான் பெருக்கத்தால் மக்கள் நோய்பரவும் அச்சநிலையான மன உணர்வுடன் காணப்படுகின்றனர். (ஜெ)

## வீரவணக்கம்....

(கந்தையா மயில்வாகனம், மருதநகர், கிளிநொச்சி, த.மு. 07ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு) என்ற நாட்டுப்பற்றாளரே சாவடைந்தவராவார்.

24-01-2009 அன்று 11 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

**வீரவேங்கை சீர்நிலா/வீரத்தேவி**
(குணசேகரம் நகுலேஸ்வரி, சக்திபுரம், உருத்திரபுரம், கிளிநொச்சி, த.மு.சுதந்திரபுரம், உடையார்கட்டு, முல்லைத்தீவு.)

**2ஆம் லெப்.மதுவாணி**
(இராமகிருஸ்ணன் தேவகி, வேலங்குளம், ஆலங்குளம், மன்னார். த.மு.மூங்கிலாறு, உடையார்கட்டு, முல்லைத்தீவு.)

**கப்டன் சேந்தன்**
(இராமர் ஜெசீலன், D3, பன்னங்கண்டி, கிளிநொச்சி. த..மு.சுதந்திரபுரம் கொலனி, உடையார்கட்டு, முல்லைத்தீவு.)

**கப்டன் செரூபன்**
(அருளன் பிரகாஸ், மட்டு.மாவட்டம்.)

**மேஜர் இளம்புயல்**
(சண்முகரத்தினம் இராஜகுமார், பேராளை, பளை, கிளிநொச்சி, த.மு. அறிவொளி கல்விநிலையம் முன்பாக முல்லைத்தீவு பரந்தன், கிளிநொச்சி. வேறு முகவரி பாண்டியன்வீதி, குமாரசாமிபுரம், விசுவமடு, முல்லைத்தீவு.)

**லெப்.தேனிசை**
(ஆறுமுகம் புவனேஸ்வரி, 14ஆம் கட்டை வசந்தன் வீதி, வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.)

**லெப்.தமிழ்க்குமரன்**
(கார்த்திகேசு சுதர்சன், வத்திராயன் வடக்கு, தாளையடி, யாழ்ப்பாணம். த.மு.பிள்ளையார் கோவிலடி, புதுக குடியிருப்பு, மாத்தளன், முல்லைத்தீவு.)

**லெப்.ஒளிவழதி**
(தேவராசா ஜீவகுமார், யாழ்.மாவட்டம். உடையார்கட்டு வடக்கு, முல்லைத்தீவு.)

**லெப்.கீர்த்தி**
(சிறிரங்கநாதன் ரஜிவிதா, யாழ். மாவட்டம். த.மு.இல.105, னு10, உருத்திரபுரம், கிளிநொச்சி. வேறுமுகவரி சுதந்திரபுரம் சந்திஅருகாமை, உடையார்கட்டு, முல்லைத்தீவு.)

**மேஜர் ராயு**
(அழகுராசா ரமணன், திருமலை மாவட்டம். த.மு.செல்வராசா திலகேஸ்வரி, பாரதிஇல்லம் வீதி, வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.)

**லெப்.கேணல் நிசாந்தன்/அகிலன்**
(விஸ்வலிங்கம் சிவகுமார், யாழ்.மாவட்டம். த.மு.100 வீட்டுத்திட்டம், சுதந்திரபுரம், உடையார்கட்டு, முல்லைத்தீவு.) ஆகிய போராளிகளே வீரச்சாவடைந்தவர்களாவர்.

05-02-2009 அன்று போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**மேஜர் கல்விமதி**
(மயில்வாகனம் சூரியகுமாரி, மட்டு. மாவட்டம், த.மு: போராளி தேனுகா, வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு) என்ற போராளியே வீரச்சாவடைந்தவராவார்.

07-02-2009 அன்று நான்கு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

**மேஜர் கயலவன்**
(பிரபாகரன் விவாஸ்கரன், விசுவமடு மேற்கு, விசுவமடு)

**கப்டன் ஆச்சிவீரன்**
(இராசரத்தினம் ஜெயராஜ், விவேகானந்தநகர், கிளிநொச்சி)

**கப்டன் செல்வழகன்**
(விஜயராஜ் தர்சன், யாழ். மாவட்டம்)

**மேஜர் செல்வம**
(வைரவநாதன் ஜெயநாதன், யாழ். மாவட்டம், த.மு: இல: 150 புன்னைநீராவி, விசுவமடு, முல்லைத்தீவு) ஆகிய போராளிகளே வீரச்சாவடைந்தவர்களாவர்.

இம்மாவீரர்களுக்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

# சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கையாக கொதித்தாறிய நீரைப் பருகும் மக்கள்

சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கையாக இடம்பெயர்ந்த மக்கள் கொதிதாறிய நீரினைப் பருகி வருகின்றனர். பல்வேறு இடங்களிலிருந்து இடம்பெயர்ந்துவந்து எதுவித வசதிகளுமற்ற இடங்களில் தறப்பாள் குடிசைகள் அமைத்து வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தமக்குத் தேவையான குடிநீரினை நீண்ட தூரம் சென்று நல்லநீர் கிடைக்கக்கூடிய பொதுக்கிணறுகள் மற்றும் பொதுமக்களின் வீட்டுக் கிணறுகளில் எடுத்து வருகின்றனர்.

அத்துடன் நீர் தாங்கிகள்மூலமும் மக்களுக்கான குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு பெற்றுக்கொள்ளும் குடிநீரினை மக்கள் தமது குடிசை வீடுகளுக்கு எடுத்துச்சென்று அவற்றைக் கொதிக்கவைத்துப் பருகிவருகின்றனர். சுகாதார விழிப்புணர்வுகொண்ட இவ்வாறான நடவடிக்கைகளை மற்றவர்களும் கடைப்பிடிக்கவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (ஜெ)

# வெயில்நேர தாகம் தணிக்க வீதியோரங்களில் இளநீர் விற்பனை

மக்களின் தாகம் தணிப்பதற்கான இளநீர் விற்பனை மாத்தளன், பொக்கணை, வலைஞர்மடம் பகுதிகளில் அதிகரித்துள்ளது.

தற்போது கடும் வெயில் நிலவுவதால் பகலில் வீதியில் பயணம் செய்வோர் வாடிவதங்கிய நிலையில் செல்கின்றனர். ஆயினும் கடந்த ஒரிரு நாட்களாக வீதியோரங்களில் இளநீர் விற்பனை அதிகரித்திருப்பதால் மதிய நேரங்களில் பயணம் செய்வோர் இதனைப் பணம் கொடுத்து வாங்கி பருகிவருகின்றனர்.

வீதியோரங்களிலுள்ள மரநிழல்களின் கீழ் இவ்வாறான இளநீர் விற்பனைகள் இடம்பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. (ஜெ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2009ஆம் ஆண்டு மார்ச் மாதம் 01ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது